# "IMPACT OF IMPLIMENTATION OF ENVIRONMENTAL LAW AND ORGANIZATION IN BATTICALOA"

Eastern University, Sri Lanka
Academic Affairs Department
2 4 APR 2018
Vantharumoolai
Chenkalady

NAME:- SUNDARALINGAM MATHIYURAN

REG.NO:- EU/IS/2011/AC/388

INDEX NO:- CS4688

DISSERTATION SUBMITTED FOR THE PARTIAL FULFILLMENT OF REQUIREMENTS FOR THE DEGREE OF BACHELOR OF ARTS (SPECIAL) IN PHILOSOPHY IN THE FACULTY OF ARTS AND CULTURE, EASTERN UNIVERSITY , SRI LANKA.

LIBRARY
22 JUN 2018
EASTERN UNIVERSITY, SRI LANKA.

FAC520
Project Report
Library - EUSL

DEPARTMENT OF PHILOSOPHY & VALUE STUDIES.

FACULTY OF ARTS & CULTURE.

EASTERN UNIVERSITY,

SRILANKA.

2017

PROCESSED
Main Library, EUSL

## முன்னுரை.

மனிதன் பூரண சுகதேகியாக இவ்வுலகில் வாழ்வதற்கு மாசற்ற சூழல் அவசியமாகும். அதுமட்டுமின்றி உலகிலுள்ள அனைத்து உயிரினங்களின் நிலவுகைக்கும் ஓசோன் படலம் அவசியமாகும். இயற்கையின் படைப்பாகிய இவற்றின் முக்கியத்துவம் உணரப்படாமல் மனிதன் தனது புதிய கண்டுபிடிப்புக்கள் மூலமும் தனது செயற்பாடுகள் மூலமும் இவற்றிற்கு பாதிப்பு ஏற்படும் வகையில் செயற்பட்டு வந்தான். இதன் விளைவாக சூழல் மாசடையத் தொடங்கியதுடன் ஓசோன் படலத்தில் துவாரங்களும் ஏற்படத் தொடங்கின. மனிதநடவடிக்கைகள் மூலமாக செயற்கையாக உற்பத்தி செய்யப்பட்டு வளிமண்டலத்துக்கு வெளியிடப்படுகின்ற இரசாயணவாயுக்கள் நிலம் நீர் என்பவற்றுடன் கலக்கப்படும் இரசாயனப் பதார்த்தங்கள் மற்றும் தேவையற்ற வகையில் ஏற்படுத்தப்படும் சத்தங்கள் இதற்கு காரணங்களாக அமைகின்றன என கூறப்படுகின்றது.

இதன் மூலமாக அதிகளவிலான தோல்புற்றுநோய்கள் மற்றும் கண்புரைநோய்கள் ஏற்படுவதோடு மனிதர்களின் நோய் எதிர்ப்புச் சக்தியையும் குறைக்கின்றது. புறஊதாக்கதிர்கள் புவிமேற்பரப்பைவந்தடையும் அளவானது அதிகரிக்கின்றமையால் உணவு உற்பத்தியின் அளவையும், கடல் நீரில் வாழும் "Plankton" தாவரங்களின் அளவையும் குறைக்கின்றது.

தற்காலத்தில் இயற்கையின் முக்கித்துவம் உணரப்பட்டு சூழல் மாசடைவதையும் ஓசோன் படை தேய்வையும் தடுக்கும் வகையிலும் இயற்கை வளங்களையும் புராதன தொல்பொருட்களையும் பாதுகாகக்க சர்வதேச ரீதியாகவும் தேசிய ரீதியாகவும் புதிய சட்டங்களும் தாபனங்களும் உருவாக்கப்பட்டுள்ளன. குறிப்பாக Vienna Convention for the Protection of the Ozone Layer (1985), Montreal Protection on Substances that deplete the Ozone Layer(1986), National Environmental Act, The National Heritage Wildness Areas Act, UNESCO Convention Concerning the Protection of the World Cultural and Natural heritage (1972), Fauna and Flora

Protection Ordinance, Forest Ordinance, Marine Pollution Prevention Act போன்ற சட்டங்களை குறிப்பிடலாம். இச்சட்டங்கள் உருவாக்கப்பட்டு இருந்தாலும் அவற்றின் நடைமுறை அல்லது பிரயோகப்பயன்பாடு என்பது பிரதேசத்திறகு பிரதேசம் வேறுபட்ட வகையில் காணப்படுகின்றது. அந்தவகையில் எமது மாவட்டமான மட்டக்களப்பில் இச்சட்டங்களின் பிரயோகம் என்பது குறைந்தளவிலேயே காணப்படுகின்றது. அதற்கு காரணம் இச்சட்டங்கள் உருவாக்கப்பட்டு பெயரளவிலேயே உள்ளன. அவற்றை ஒவ்வெரு பிரதேசத்திலும் நடைமுறைப்படுத்துவதற்கான போதியளவான நடவடிக்கைகளை அரசு எடுக்க தவறியுள்ளது. அதன் ஒரு விளைவே அண்மையில் மட்டக்களப்பு மாநகரத்தில் கழிவகற்றும் இடத்தில் இடம்பெற்ற பாரிய தீ விபத்தாகும்.

அதுமட்டுமின்றி வாவிகளையும் குளங்களையும் பராமரிக்காது அவை மாசடையக்கூடிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளன. புராதன மன்னர்களின் அடையாளங்களான உன்னிச்சைக் குளம் மற்றும் தாந்தாமலை போன்றன முறையாக பாதுகாக்கப்படாது அவற்றின் சிறப்புக்கள் மழுங்கடிக்கப்படுகின்றன. இயற்கைப் படைப்புக்கள் அனைத்தையும் பாதுகாக்க கூடிய சட்டங்கள் ஆக்கப்பட்டிருந்தலும் அவை முறையாக நடைமுறைப்படுத்தப்படுவதில்லை. இவை தொடர்பிலேயே இவ் ஆய்வு கவனம் செலுத்தியுள்ளது.

## உள்ளே....................

அத்தியாயம்: 1

✓ ஆய்வு முன்மொழிவு

1.1 *ஆய்வுத் தலைப்பு*

1.2 *ஆய்வு அறிமுகம்*

1.3 *ஆய்வு அறிமுகம்*

1.4 *ஆய்வுப் பிரச்சினை*

1.5 *ஆய்வு கருதுகோள்*

1.6 *ஆய்வின் முக்கியத்துவம்*

1.7 *ஆய்வு முறையியல்*

1.8 *ஆய்வு வரையறை*

1.9 *ஆய்வு ஒழுங்கமைப்பு*

அத்தியாயம்: 2

✓ சூழல் மாசடைதலை தடுக்க உருவாக்கப்பட்ட சட்டங்களும் மட்டக்களப்பில் அதன் நடைமுறைப்பயன்பாடும்

2.1 *அறிமுகம்*

2.2 *சூழல் பாதுகாப்பு சட்டங்கள்*

2.3 *சூழல் பாதுகாப்பு சட்டமும் மட்டக்களப்பில் அதன் பிரயோகமும்*

அத்தியாயம்: 3

✓ பல்உயிரினப் பாதுகாப்பும் அதற்காக உருவாக்கப்பட்ட சர்வதேச மற்றும் தேசிய சட்டங்களும் மட்டக்களப்பில் அதன் நடைமுறைப்பயன்பாடும்

***3.1*** *அறிமுகம்*

***3.2*** *அரசியலமைப்பு சட்டம்*

***3.3*** *Forest Ordinance*

***3.4*** *அரச காணி கட்டளைச் சட்டம்*

*3.4.1* பொது வாவிகள் மற்றும் பொது நீரோடைகள்

*3.4.2* வயற்காணிகள் பாதுகாத்தல்

*3.5 Fauna and Flora Protection Ordinance*

*3.6 Control of Pesticides Act No: 33 of 1980*

அத்தியாயம்: 4

✓ கரையோர மற்றும் கடல் பாதுகாப்பு சட்டங்களும் அதன் நடைமுறைப்பயன்படும்.

*4.1 Coast Conservation Act No. 57 of 1981*

*4.2 Marine Pollution Prevention Act No 59 of 1981*

அத்தியாயம்: 5

✓ ஓசோன் படையை பாதுகாக்க உருவாக்கப்பட்ட சட்டங்களும் இலங்கையில் அதன் நடைமுறைப்பயன்பாடும்

*5.1 Meaning of OZONE*

*5.2 Activities conducted by the NOU to implement the Montreal Protocol at country level (Sri Lanka)*

*5.3 சமவாயத்தை நடைமுறைப்படுத்துவதிலுள்ள சவால்கள்*

அத்தியாயம்: 6

✓ சுற்றாடல் சார் சட்டங்களை மட்டக்களப்பில் நடைமுறைப்படுத்த முடியாமல் போனமைக்கான காரணங்களும் அதற்கான தீர்வுகளும்.